# BSNL ஊழியர் சங்கம்
# தமிழ் மாநிலம்

## குலுங்கியது கோவை

அன்பார்ந்த தோழர்களே,

BSNL ஊழியர் சங்கத்தின் உறுப்பினர் சரிபார்ப்பு தேர்தல் பிரச்சாரக்கூட்டம் கோவையில் 21.03.2016 அன்று காலை நடைபெற்றது கோவை மாவட்ட BSNL ஊழியர் சங்கத்தின் தலைவர் தோழர் K.சந்திரசேகரன் தலைமையில் நடைபெற்ற அந்த பிரச்சார பொதுக்கூட்டம் கோவை மத்திய தொலைபேசி நிலைய வளாகத்தில் நடைபெற்றது. அந்தப் பொதுக்கூட்டத்தில் கோவை மாவட்டம் மட்டுமல்லாமல் ஈரோடு மற்றும் நீலகிரி மாவட்டங்களை சேர்ந்த தோழர்கள் பலரும் பங்கேற்றனர். சுமார் 600க்கும் மேற்பட்ட தோழர்கள் பங்கேற்ற அந்தக் கூட்டத்தில் வந்தவர்களை கோவை மாவட்ட BSNL ஊழியர் சங்கத்தின் மாவட்ட செயலாளர் தோழர் C.ராஜேந்திரன் வரவேற்றார். அந்த பிரச்சாரக் கூட்டத்தில் BSNL ஊழியர் சங்கத்தின் மாநில செயலாளர் தோழர் A.பாபு ராதாகிருஷ்ணன், அகில இந்திய உதவி பொது செயலாளர் தோழர் S.செல்லப்பா மற்றும் அகில இந்திய பொது செயலாளர் தோழர் P.அபிமன்யு ஆகியோர் சிறப்புரை ஆற்றினார்கள்.

BSNL ஊழியர் சங்கத்தின் பொது செயலாளர் தோழர் P.அபிமன்யு தனது சிறப்பான உரையில் கடந்த மூன்றாண்டு காலம் BSNL ஊழியர் சங்கம் செய்த சாதனைகளை எடுத்துரைத்தார். அரசின் கொள்கைகள் எவ்வாறு நமது நிறுவனத்தை சீரழிக்க முயற்சிக்கிறது, அதனை எதிர்த்து நமது மத்திய சங்கம் எவ்வாறு அனைவரையும் அரவணைத்து போராடி தடுத்து வருகிறது என்பதையும், BSNL நிறுவனத்தை பாதுகாக்க நாம் எடுத்துவரும் நடவடிக்கைகளையும், ஊழியர்களின் பிரச்சனைகளை நமது சங்கம் கையாண்டு தீர்வு கண்டு வருவதையும் அற்புதமாக விளக்கி உரையாற்றினார். இறுதியில் நமது கூட்டணி சங்கமான BSNLMS சங்கத்தின் மாநில செயலாளர் தோழர் வரதராஜன் நன்றி கூறி முடித்து வைத்தார்.

இந்தக் கூட்டத்தில் BSNL ஊழியர் சங்கத்தின் மாநில சங்க நிர்வாகிகள் தோழர் K.மாரிமுத்து, தோழர் V.வெங்கட்ராமன், தோழர் S.சுப்ரமணி, தோழர் A.முகமது ஜாபர், தோழர் V.மணியன், நீலகிரி மாவட்ட செயலாளர் தோழர் V.முரளிகிருஷ்ணன், ஈரோடு மாவட்ட செயலாளர் தோழர் L.பரமேஸ்வரன் ஆகியோரும் பங்கேற்றனர். அகில இந்திய அளவில் மட்டுமல்ல, தமிழகத்திலும் நமது சங்கம் மிக பிரமாண்டமான வெற்றியை பெறும் என்பதனை எடுத்துக் காட்டும் வகையில் நடைபெற்ற இந்தக் கூட்டம் கோவையை குலுக்கியது என்றால் அது மிகையாகாது. இதற்கான ஏற்பாடுகளை செய்த நமது மாவட்ட சங்கங்களை தமிழ் மாநில சங்கம் மனதார பாராட்டுகிறது.


BSNLEU


BSNLEU


BSNLEU

BSNLEU






